இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 90 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 24 – செவ்வாய்க்கிழமை 10 நவம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 90 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 24 - Tuesday 10 November 2026 - Madurai 8 Pages ₹ 5.00

## தீபாவளியன்று சிறப்பு ஆய்வாளர் முதல் சிறுவர்கள் வரை

# ஒரே நாளில் 15 பேர் வெட்டிக் கொலை!

## த.வெ.க. ஆட்சி தமிழ்நாட்டில் கொலையாட்சி ஆகிவிட்டது!

**சென்னை, நவ. 10 -**

**த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு படுபாதாளத்திற்குச் சென்றுவிட்டது என்பதை நிரூபிக்கும் வகையில், தீபாவளி நாளான்று, தமிழ்நாட்டில் 15 படுகொலை சம்பவங்கள் அரங்கேறி பொதுமக்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.**

மக்களின் வீடுகளில் விளக்கேற்றி, பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட வேண்டிய தீபாவளி பண்டிகை நாள், தமிழ்நாட்டில் கண்ணீரிலும் பயங்கரமான ரத்த வெள்ளத்திலும் நனைந்து போயுள்ளது. தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமடைந்து விட்டதாகவும், ரவுடிகளுக்கும் சமூக விரோதிகளுக்கும் காவல்துறையின் மீதான பயம் துளியும் இல்லாமல் போய்விட்டது என்றும் எதிர்க்கட்சிகளும் பொதுமக்களும் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், அதை நிரூபிக்கும் வகையில் நேற்று முன்தினம் தீபாவளி பண்டிகையன்று ஒரே நாளில் மட்டும் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் உட்பட 15 பேர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒட்டுமொத்தத் தமிழகத்தையுமே உறைந்து போகச் செய்துள்ளது. பண்டிகை நாளில் கூட மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாத அளவிற்கு ஆட்சி நிர்வாகமும் காவல் துறையும் முடங்கிவிட்டதா என்ற கொந்தளிப்பு எழுந்துள்ளது.

### பண்டிகை நாளில் அரங்கேறிய 15 கொலைகள்!

தேனியில் சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த போதை கும்பலை, தட்டிக்கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார் அடித்துக்கொலை செய்யப்பட்டார்.

திருச்சி மாவட்டம் சமயபுரம் சுங்கச்சாவடி அருகே ராகுல், விஷால் ஆகிய 2 சிறுவர்கள் கொடூரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இதேபோல், சமயபுரம் அருகே புறத்தாக்குடியில் பட்டாசு வெடிப்பதில் ஏற்பட்ட மோதலில் ஐ.டி.ஊழியர் கிறிஸ்டோபர் என்பவர் ஸ்பேனரால் குத்திக்கொலை செய்யப்பட்டார். சென்னை பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடியில் தனுஷ் எனும் 18 வயது இளைஞர் ஓட ஓட வெட்டிக்கொலை செய்யப் பட்டார்..

கடலூர் மாவட்டம் பெரிய கட்டுப்பாளையத்தில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில்




பிரிதிவிராஜ் என்ற 26 வயது இளைஞர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

சிவகங்கை முருகபாஞ்சான் கிராமத்தில் விக்னேஷ் என்ற இளைஞரும், சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே 25 வயதான நவீன் என்பவரும் மர்ம கும்பலால் ஓட ஓட விரட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், பென்னலூர் பேட்டை காப்புக்காடு பகுதியில் மணிமேகலை எனும் 24 வயது பெண் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டார். நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே பாப்பாபட்டியில் வனோபி என்ற பெண் படுகொலை செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே சுவேதா என்ற பெண் கழுத்தில் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே நின்னையூரில் முன்விரோதம் காரணமாக பாலசுப்ரமணியன் என்பவர் படுகொலை செய்யப் பட்டார்.

பெரம்பலூர் அருகே நொச்சியம் கிராமத்தில் 50 வயதான ரவி என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.

காஞ்சிபுரம் திருகாலிமேடு நேதாஜி நகரைச் சேர்ந்த பார்த்திபன் என்பவர் தலையில் கல்லை போட்டு கொடூரமாக கொலை செய்யப் பட்டார். அவரது உடல் திருகாலிமேடு அருகே ரயில்வே தண்டவாளம் அருகே மீட்கப்பட்டது.

விருதுநகர் அருகே பாலவனத்தம் கிராமத்தில் தீபாவளி நாளன்று மது அருந்தும்போது ஏற்பட்ட தகராறில் அன்பு செல்வம் எனும் 25 வயது இளைஞர் கீழே தள்ளி கழுத்தில் மிதித்து கொலை செய்யப்பட்டார்.

இதன்மூலம் தீபாவளி நாளன்று தமிழ்நாட்டில் ஒரே நாளில் அரங்கேறிய படுகொலைகளின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்தது.

தீபாவளி நாளன்று, ஒரே நாளில் 15 படுகொலைகள் அரங்கேறியிருப்பது தமிழ் நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்! த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

### காவல்துறையின் கட்டுப்பாடு நழுவிவிட்டதா?

ஒரே நாளில் அடுத்தடுத்து 15 மனித உயிர்கள் கொடூரமாகப் பறிக்கப்பட்டிருப்பது வெறும் தற்செயலான நிகழ்வு அல்ல. சமூக விரோதிகள், போதைக் கும்பல்கள் மற்றும் கூலிப்படைகள் எந்தவித அச்சமுமின்றித் தங்கள் விருப்பப்படி செயல்படத் தொடங்கிவிட்டனர் என்பதையே இது நிரூபிக்கிறது.

குறிப்பாக, பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய சீருடை அணிந்த காவல் அதிகாரியையே ஒரு போதைக் கும்பல் சாலையில் அடித்துக் கொல்கிறது என்றால், தமிழ்நாட்டில் சட்டம் எங்கே இருக்கிறது என்ற அச்சம் சாமானிய மக்களை ஆட்டிப்படைக்கிறது. கஞ்சா மற்றும் மதுபோதையின் ஆதிக்கமும், பட்டாக் கத்திகள் சர்வ சாதாரணமாகப் புழங்குவதும் இந்த வன்முறைகளுக்கு முக்கியக் காரணமாக அமைகிறது.

### அரசின் படுதோல்வி

சென்னை பிரியாணி கடையில் அரிவாள் வெட்டு, செங்குன்றத்தில் எஸ்.ஐ. மீது தாக்குதல் முயற்சி, குழந்தைகள் மாயமாவது எனத் தொடர்ச்சியாக அபாய மணிகள் அடித்தும், ஆளும் விஜய் அரசு சட்டம்ஒழுங்கைத் தீவிரமாகக் கையில் எடுக்கவில்லை என்ற விமர்சனம் வலுத்துள்ளது. முதல்வர் உடனடியாகத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை டி.ஜி.பி.யை அழைத்து அவசர உயர்நிலைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். போதைக் கும்பல்களையும் கூலிப்படை ரவுடிகளையும் கூண்டோடு வேட்டையாடி சிறையில் தள்ள கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், பண்டிகை தினங்கள் கூட பாதுகாப்பு இல்லாத பயங்கர நாட்களாகவே மாறிவிடும் என்ற அச்சம் மக்கள் மனதில் வேரூன்றிவிடும்.

### தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

இதுதொடர்பாக தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், **ஒரே நாளில் 15 கொலைகள் என்று செய்தி வெளியான அடுத்த கணமே, 15வது கொலையைப் பற்றிய செய்தியும் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு தமிழ்நாட்டில் தீபாவளி நன்னாளிலும் கூடச் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**'மாற்றத்தின்' ஆட்சியில் குற்றவாளிகளுக்குப் பயமே இல்லையா என வினவியுள்ள தி.மு.க. ஐ.டி. விங், அரசின் மெத்தனப் போக்கையும், காவல்துறையின் அலட்சியத்தையும் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது. நாடே தீபாவளி திருநாளை கொண்டாடும் நாளில் ஒரே நாளில் 15 படுகொலைகள்! மக்களின் உயிரைப் பாதுகாக்கத் தவறிய இந்த டம்மி அரசின் மெத்தனப் போக்கே இதற்குக் காரணம்! என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

### 'டம்மி' மாமா நடவடிக்கை எடுப்பாரா?

**சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் சிறுவர்கள் வரை ஒரே நாளில் 15 பேர் வெட்டிக் கொலை! குற்றச் செயல்களைத் தடுக்கத் தவறிய அரசின் அலட்சியமே இந்தத் தீபாவளியைக் 'கொலைத் தீபாவளியாக' மாற்றியிருக்கிறது என்று தெரிவித்துள்ள தி.மு.க. ஐ.டி. விங், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இனியாவது நடவடிக்கை எடுப்பாரா இந்த டம்மி மாமா?** என்று கேள்வி எழுப்பியுள்ளது.

---

### 'சோப்ளாங்கி' ஆட்சியில் ஒரே நாளில் 15 பேர் கொலை! பண்டிகை நாளில்

# பட்டாசு சத்தத்தைவிட பட்டா கத்திகளின் சத்தமே அதிகம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, நவ. 10 -**

**'சோப்ளாங்கி' ஆட்சியில் ஒரே நாளில் 15 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். தீபாவளியான பண்டிகை நாளில் பட்டாசு சத்தத்தைவிட பட்டா கத்திகளின் சத்தமே அதிகம்" என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இந்த சோப்ளாங்கி ஆட்சியில் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் காவலர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் பண்டிகை நாளில் பட்டாசு சத்தத்தைவிட பட்டா கத்திகளின் சத்தமே அதிகம் கேட்கும் அளவுக்கு கேடுகெட்ட ஆட்சியை நடத்திக் கொண்



டிருக்கும் இந்த Dummy CMஐ வன்மையாக கண்டிக்கிறேன்.

Dummy CM, ஆய்வு செய்கிறேன் என்று சிறைக்குப் போனால் கைதிகள் தப்பிக்கிறார்கள் காவல் நிலையங்களுக்குப் போனால் காவலர்கள் கொலையாகிறார்கள்.

இந்த மூடர் கூட்டத்தின் ஆட்சியில் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை - அவர்களை காக்க வேண்டிய காவலர்களுக்கும் Safety இல்லை.

கோரிக்கையோடு சென்றவரை துணை சபாநாயகரே அடித்து விரட்டுவதும் பின் மிரட்டி வீடியோ வெளியிட வைப்பதும் - தமிழ்நாடு இதுவரை பார்த்திடாத கேவலம்.

ஆய்வு செய்தேன் - ஆபிஸரை நியமித்தேன் என்றும் - தி.மு.க - தி.மு.க என்றும் இன்னும் எத்தனை நாள் மக்களை ஏமாற்றுவார் இந்த அட்டக்கத்தி சி.எம்.?

தமிழ்நாட்டு மக்கள் சிந்தும் கண்ணீருக்கும் - ரத்தத்துக்கும் இந்த சர்க்கஸ் ஆட்சியாளர்கள் பதில் சொல்லும் நாள் வெகு தொலைவில் இல்லை.

**எத்தனை நாள் ஏமாற்றுவார் இந்த அட்டைக்கத்தி CM!**

**ஆய்வு செய்தேன் – ஆபிஸரை நியமித்தேன் என்றும் – தி.மு.க – தி.மு.க என்றும் - இன்னும் எத்தனை நாள் மக்களை ஏமாற்றுவார் இந்த அட்டக்கத்தி சி.எம்?**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

மேகதாது அணை: தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு

## நாட்டின் சட்டதிட்டங்கள் தெரியுமா?

### கர்நாடக முதல்வர் டி.கே.சிவக்குமார் கேள்வி!

*பெங்களூரு, நவ. 10-* மேகதாதுவில் அணை கட்ட யாரிடமும் அனுமதி வாங்க தேவையில்லை என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் செய்தியாளர்களைச் சந்தித்த அம்மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், "தமிழ் நாட்டின் முதலமைச்சருக்கு நாட்டின் சட்டதிட்டங்கள் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். மேகதாது அணை கட்டுவதற்காக யாரிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. கர்நாடகா தனது சொந்த இடத்தில் அணையைக் கட்டிக்கொள்ளலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றமே அனுமதி அளித்துவிட்டது.

இந்த விவகாரத்தில் கர்நாடகா ஒற்றுமையுடன் உள்ளது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து, பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) அனைத்துத் தலைவர்களும் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவுக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஒரு குழுவை அனுப்பி வையுங்கள். இந்த வாய்ப்பை நாங்கள் தவறாகப் பயன்படுத்த மாட்டோம். சண்டையிடுவதற்கோ அல்லது மோதிக்கொள்வதற்கோ இடமே இல்லை. அந்த காலம் முடிந்துவிட்டது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது. நாட்டின் சட்டத்தை மதிப்போம். இணைந்து செயல்படுவோம், நீரைப் பகிர்ந்து கொள்வோம். நம் மிடையே உள்ள ஒற்றுமை உணர்வை மேலும் பலப்படுத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.